# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

*************

**முறையீட்டு மனு எண்.1223/2017/பே.**
**ஆணை எண். 59/ நாள்:20 –03–2018**

**ஊர் பொதுமக்கள்,**
**கயத்தார் பேரூராட்சி,**
**தூத்துக்குடி மாவட்டம். -- முறையீட்டு மனுதாரர்கள்.**

**செயல் அலுவலர்,**
**கயத்தார் பேரூராட்சி,**
**தூத்துக்குடி மாவட்டம். -- எதிர் மனுதாரர்**

**ஆணை.**

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு பேரூராட்சி பொதுமக்கள் என முகவரியிட்ட 04.09.2017 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.09.2017 அன்று பெறப்பட்டு முறையீட்டு மனு எண். 1223/2017 ஆக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனு மீது உரிய அறிக்கைகள் பெறப்பட்டு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

மேற்படி முறையீட்டு மனுவில், தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு பேரூராட்சியில் செயல் அலுவலராக பணபுரிந்து வரும் திரு அழகர், என்பவர் மீது கீழ்கண்ட புகார்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

1. திரு அழகர் பேரூராட்சி செயல் அலுவலராக பொறுப்பேற்றது முதல் கட்டிட வரைபட அனுமதி வழங்குவதில் முறைகேடு.
2. குடிநீர் பராமரிப்பிற்கான பொருட்கள் வாங்குவதில் சுய லாபத்திற்காக செயல்பட்டு முறைகேடு.
3. பேரூராட்சி செயல் அலுவலர் கழுகுமலை பேரூராட்சிக்கும் பொறுப்பு செயல் அலுவலராக உள்ளதால் கயத்தாறு பேரூராட்சி அலுவலகத்திற்கு முறையாக

வருவதில்லை எனவும் இதனால் பொதுமக்களுக்கு தங்கள் குறைகளை தெரிவிப்பதில் மிகவும் சிரமம் ஏற்படுகிறது.

4. அதனை தவிர்த்து மேற்படி பேரூராட்சி செயல் அலுவலரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டாலும் முறையாக பதில் அளிப்பதில்லை.
5. செயல் அலுவலரிடம் குறைகள் சொல்லும் நபர்களிடம் தரக்குறைவாக பேசுகிறார்.
6. கயத்தார் பேரூராட்சியில் உள்ள 15 வார்டுகளிலும் கடும் குடிநீர் பிரச்சினை உள்ளதாகவும் இதனை பலமுறை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கூறியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இம்முறைமன்ற நடுவ 20.09.2017ம் நாளிட்ட அறிவிப்பாணையில் மேற்கண்ட புகார் மனு, பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு உரிய விசாரணைகள் மேற்கொண்டு அதற்கான அறிக்கையினை உரிய குறிப்புகளுடன் அனுப்பிவைக்கக் கோரி, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் 2014, பிரிவு. 6 (4) (a) ன் கீழ் ஆணையிடப்பட்டது.

திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், தனது கடித ந.க.எண். 3603/2017/ப.3/நாள் 18.12.2017ன் மூலம் தனது ஆய்வறிக்கையினை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டம், கயத்தாறு பேரூராட்சி சுமார் 13,000 மக்கள் தொகையுடன் 15 வார்டுகள் மற்றும் 72 தெருக்களை கொண்டதாகும் என தெரிவித்துள்ளார். கயத்தாறு, கழுகுமலை, எட்டையபுரம் பகுதிகளுக்கு சீவலப்பேரி கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதாகவும் இதன் மூலம் கயத்தாறு பேரூராட்சி அனைத்து பகுதிகளுக்கும் சீராக குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

கயத்தாறு பேரூராட்சியில் 3 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளிலும் சேர்த்து மொத்தம் 7.50 லட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்டதாக உள்ளதாகவும் இதன் மூலம் கயத்தாறு பேரூராட்சியில் சீராக 2,462 வீட்டு குடிநீர் இணைப்புகளுக்கும் 78 பொது குழய்களுக்கும் குடிநீர் விநியோகம் செய்யப்படுவதாகவும், மேலும் தினசரி விநியோகம் செய்யப்படும் குடிநீர் குளோரினேஷன் செய்யப்பட்டே வழங்கப்படுவதாகவும், சுகாதார ஆய்வாளர்களால் குளோரினேஷன் செய்யப்படும் குடிநீர் ஆய்வு செய்யப்பட்டு வருவதாகவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கயத்தாறு பேரூராட்சி செயல் அலுவலர், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் பேரூராசிகளின் உதவி இயக்குநர் அலுவலக ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ள செல்வதைத் தவிர மற்ற தினங்களில் அலுவலகத்தில் முறையாக பணிகள் மேற்கொள்வதாகவும், அலுவலகத்திற்கு அலுவலக நேரங்களில் வரும் பொதுமக்கள் கூறும் குறைகள் உடனுக்குடன் நிவர்த்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கயத்தாறு பேரூராட்சியில் மொத்தம் 12 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 2 சுய உதவிக் குழுக்கள் மூலம் 29 நபர்களை கொண்டு வீடு வீடாக குப்பைகள் தரம் பிரித்து வாங்கப்பட்டு மக்கும் குப்பை உரமாக்கப்படுவதாகவும், வாரம் இருமுறை வடிகால்கள் சுத்தம்

செய்யப்படுவதாகவும், டெங்கு மஸ்தூர் பணியாளர்கள் 10 நபர்களை கொண்டு கொசு ஒழிப்பு பணிகள் நாள்தோறும் அனைத்து தெருக்களிலும் புகைபோக்கி இயந்திரத்தின் மூலம் நடைபெறுவதாகவும் தெரிவித்துள்ளார். பேரூராட்சியின் துப்புரவு மேற்பார்வையாளர்கள் தினசரி அனைத்து தெருக்களிலும் ஆய்வு மேற்கொண்டு அதற்கான அறிக்கையினை செயல் அலுவலருக்கு சமர்ப்பிப்பதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் பள்ளி மாணவ மாணவியர்களுக்கு வாரம் ஒரு முறை நிலவேம்பு கஷாயம் வழங்கப்பட்டு டெங்கு நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், கயத்தாறு பேரூராட்சியில் பொது சுகாதார பணிகள் தொய்வின்றி நடைபெற்று பொது சுகாதாரம் பேணப்பட்டு வருவதாகவம் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கயத்தாறு பேரூராட்சிக்கு பொது சுகாதர பராமரிப்புக்குத் தேவையான பொருட்கள், குடிநீர் திட்ட உதிரி சாமான்கள் மற்றும் இதர பராமரிப்பு பொருட்கள் வருடாந்திர ஒப்பந்த விலையில் வாங்கப்பட்டு முறையாக இருப்பு பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும், கயத்தாறு பேரூராட்சியில் நகராட்சி சட்ட விதிகள் பின்பற்றப்பட்டு கட்டிட வரைபட அனுமதி வழங்கப்படுவதாகவும், சட்டத்திற்கு புறம்பாக எந்த கட்டிட அனுமதியும் வழங்கப்படவில்லை எனவும் தெரிவித்துள்ளார். அடிபம்பு பராமரிப்பிற்கு தேவையான அனைத்து உதிரி பொருட்களும் முறையாக ஒப்பந்த விதிகளின்படி நிர்வாக அனுமதி பெற்று பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தனது அறிக்கையில் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருநெல்வேலி மண்டலம் தெரிவித்துள்ளார்.

மேலும் வரப்பெற்ற புகார் மனுவில் கையொப்பமிடப்பட்ட திரு பி.டி. பரமசிவன், கயத்தாறு பேரூராட்சியின் முன்னாள் 1வது வார்டு உறுப்பினர் எனவும், அன்னார் பெயரிட்டு வரப்பெற்ற மனு குறித்து விசாரித்த போது தனக்கும் அப்புகார் மனுவிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்றும், அன்னார் தரப்பிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட தன்னிலை விளக்கத்தின் நகலினையும் இணைத்து சமர்ப்பித்துள்ளார்.

கயத்தாறு பேரூராட்சியில் செயல் அலுவலரால் பேரூராட்சியில் மேற்கொள்ளப்படும் பணிகள் நல்லமுறையில் செயல்படுத்தப்பட்டு வருவது விசாரணையில் தெரியவருவதாகவும், எந்தவிதமான முறைகேடான நடவடிக்கைகளும் பேரூராட்சியில் நடைபெறவில்லை எனவும் திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் வரப்பெற்ற புகார் மனுவில் கயத்தாறு பேரூராட்சியின் பொதுக்கள் என குறிப்பிட்டு அடியில் கையொப்பமிப்பட்ட திரு பி.டி. பரமசிவன் என்பவர் தான் இம்மனுவினை எழுதவில்லை எனவும், தனக்கும் மேற்படி மனுவிற்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் விசாரணையில் தெரிவித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே திருநெல்வேலி மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரின் அறிக்கையினை ஏற்று முறையீட்டு மனு முகாந்திரமற்றதாக கருதி தள்ளுபடி செய்து அவ்வாறே உத்திரவிடப்படுகிறது.

2018ம் ஆண்டு மார்ச் திங்கள் 20 –ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

செயலாளருக்காக.

பெறுநர்
1.செயல் அலுவலர்,
கயத்தார் பேரூராட்சி,
தூத்துக்குடி மாவட்டம்.
2.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்
திருநெல்வேலி மண்டலம்.
என்.ஜி.ஓ. காலனி,
ஜவஹர் நகர், பெருமாள்புரம்,
திருநெல்வேலி–627